மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பொதுவாக, 10, 20 துணைக் கேள்விகளுக்குமேல் நான் அனுமதித்திருக்கிறேன்.

DR. H. V. HANDE : Sir, the Hon. Minister in his reply has stated that as far as the Madras City is concerned, it is running at a loss. But in the Bombay City, a bigger City than the Madras City with great complications than those listed in the Paper placed on the table of the House, it is getting on well. The average vehicle mileage done in the Madras City during 1965–66 was 137 whereas, according to the Hon. Minister, the economic mileage is 146 miles. That means that it is nearly 9 miles less than the economic mileage. For that a number of reasons are given but those reasons are flimsy. In the Bombay City they are having profit. . . .

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கனம் உறுப்பினர் அவர்கள் முதலிலேயே ஒன்றைத் தெரிந்துகொள்வது நல்லது. பம்பாயில் நகரப் போக்குவரத்துமூலம் லாபம் வருவதாகச் சொன்னார்கள். நான் அதைத் தெரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காகவே பம்பாய் போயிருந்தேன். பம்பாய் நகர மேயருடன் பேசினேன். அங்கும் நட்டம்தான் வருகிறது. நமக்கு லட்சக்கணக்கில் நட்டம் என்றால் அவர்களுக்கு கோடிக்கணக்கில் நட்டம்.

DR. H. V. HANDE : Sir, on the one hand we are having heavy losses which are increasing in arithmetic progression and on the other hand dissatisfaction is also piling up—I am not speaking about the loss. So, will the Hon. Minister reconsider the whole matter?

(No reply)

சாணிப்பட்டியருகில் பெரியருவி ஆற்றின் குறுக்கே பாலம்

* 221—**வினா. திரு. பெ. மலைச்சாமி:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா.—

மேலூர் வட்டம், சாணிப்பட்டிக்கு அண்மையில் ஓடும் பெரியருவி ஆற்றின் மீது பாலம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இந்தப் பாலம் கட்டப்பட வேண்டுமென்னும் வேண்டுகோள் குறித்து ஆராயப்பட்டது. ஆனால் இப்பணி நான்காம் திட்டம்வரையில் எற்றுக்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்களில் சேர்க்கப்படவில்லை. நிதி நிலை சீர் பெறும்போது, பின்னால் இது குறித்து ஆலோசிக்கப்படும்.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, இந்த ஆற்றைக் கடந்து பல பேருந்து வண்டிகள் செல்கிற காரணத்தால் மழை காலங்களில் தடங்கல் எற்படுகிறது. தற்போது பெரிய பாலமாகக் கட்ட முடியாவிட்டாலும் சிறிய பாலமாவது கட்ட அனுமதி வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இரண்டு நாட்களுக்கு முன்பு ஒரு கேள்விக்கு, 2 பாலங்கள் கட்டப்பட்டு வருவதான மகிழ்ச்சிகரமான செய்தியைச் சொன்னேன். அதோடு அவர் திருப்தி அடைந்திருக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.